# சித்தர்கள் பார்வையில் பொருள் தத்துவம்.

**மரு.த.சிவசங்கரி**

**அரசு சித்த மருத்துவ கல்லூரி, சென்னை**

sivasankarikamalanathan@gmail.com.

**33**

**ஆய்வு சுருக்கம்-**

"உண்மை"என்ற பொருளை ஆராய்வது "மெய்ஞானம்", அழியும் அல்லது பகுதிகளாகப் பிரியும் பொருள்களை அறிவது விஞ்ஞானம் ஆகும். பிரபஞ்சம், உலகம், உடல் அனைத்தும் பொருள்களால் ஆனது. அவை 3 பிரிவாக உள்ளது உருவபொருள், அருவபொருள், அருஉருவ பொருள். பொருள்களின் தத்துவத்தை சித்தர் கூறிஉள்ளதை இக்கட்டுயிில் காண்போம்.

**திறவு சொற்கள்:** பிரபஞ்சம், பொருள், தத்துவம்.

**ஆய்வு நோக்கம்-** சித்தர்கள் பார்வையில் பொருள் தத்துவம்.

**முன்னுரை:-**

"சித்" என்றால் அறிவு,தெளிவு என்று பொருள். "சித்தர்" என்றாலே தெளிவானவர் முழுமை அடைத்தர். சித்தர் தத்துவம் என்பது அறிவை கொண்டு ஒப்புக் கொள்ள வேண்டிய உய்த்துணரும் பார்வையோடு காண வேண்டிய, விஞ்ஞான மெய்ஞ்ஞானப் பேரறிவுக் களஞ்சியமாகும். பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்றால், பிரபஞ்சத்தை பற்றி அறிய உதவிகளாயிடுக்கும் கருவிகள் பற்றிய புரிதல் இருக்க வேண்டும். சித்தர்கள் கூறிய பிரபஞ்ச பொருட்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம் .

**உடல் தத்துவம்**

தத்துவம் என்ற சொல்லிற்கு உண்மை என கூறுவர்

*" அண்டத்தில் உள்ளதே பிண்டம்*

*பிண்டத்தில் உள்ளதே அண்டம்*

*அண்டமும் பிண்டமும் ஒன்றே*

*அறிந்து தான் பார்க்கையிலே"* *சட்டமுனி*

அண்டம் என்பது இந்த பிரபஞ்சம், பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் பிண்டமான இம் மனித உடலிலுப் உள்ளது. உடல் தத்துவத்தை அறிந்தாலே பிரபஞ்ச தத்துவத்தை அறிய முடியும்.

***"உடலை முன்னம் இழுக்கென்று இருந்தேன்,***

***உடம்பினுக்கு உள்ளே உறு பொருள் கண்டேன்,***

***உடம்பு உளே உத்தமன் கோயில் கொண்டான் என்று***

***உடம்பினை யாள் இருந்து ஓம்பு கின்றேனே".*** திருமுலர்.

**பொருள் தத்துவம்.**
பொருள் மூன்றுவகைப்படும் அவை.

அருவப்பொருள், அருவுரு பொருள், உருவப் பொருள்.

அருவப் பொருள் மெய் ஞானத்திலும், அருவுருவம் பொருள், உருவப்பொருள் விஞ்ஞானத்திலும் விளக்கப்பட்டுள்ளன.

உலகத்துப் உருவ பொருள் எல்லாம் அப்பொருள் தொழிலினாலும், பண்பினாலும், உருப்பினாலும் உணர்வது போல், அருவப் பொருளையும் ஓதினர்.

"***நிலம், தீ, நீர் வளி விசுப்போடைந்துங் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்".***

-தொல்காப்பியம் பொருளதிகாரம் 635.
இந்த ஐம் பெரும் பூத அணுக்களால் ஆனது இவ்வுலகம்

இவ்வைம்பெரும் பூத அணுக்களில் ஒவ்வொர் அணுக்கள் தோறும் 96 தத்துவங்கள் பொருத்தியிடுக்கின்றன

"***உருவும் அருவும் உருலோ டருவும் மருவு பரசிவன் மன் பல்லுயிர்க்குங்"*** "திருமந்திரம்-1716"

உருவம் நான்கு - அயன், அரி, அரன், ஈசன்.

அருவுருவம் சதாசிவன் அருவம் நான்கு - வித்து, நாதம், சக்தி, சிவம்.

உருவம் நான்கும் கீழ்ப்படி என்றும், அருவம் நன்கும் மேற்படி என்றும், அருஉருவம் நடுப்படி என்றும் அழைக்கப் பெறும்

உலகத்தில் காணப்படும் பொருள்கள் உருவமாயும், உருவருமாயும், அருமாயும், தோற்றமளிக்கின்றன .அருவமும், உருவமும் பிரிக்கப் படாதது

அருவத்தில் உருவமும், உருவத்தில் அருவமும் பிணைந்து கிடக்கின்றன என்பதை.

"***பெருவாய் முதலெண்ணும் பேதமே பேதித்து***
***அருவா யுருவாய் அரு வுருவாகிக் குருவாய் வருஞ் சக்தி கோனுயிர்ப் பண்மை உருவாயு டனிருந்த தொன்றா யன்றாமே"***

திருமந்திரம் 2442.
**அருவம்**

**சிவம்-** உருவமும் இல்லை, குறியும் இல்லா குணம் இல்லை, அழுக்கு இல்லை, அது ஏகம். சிறியவற்றுள் சிறியது, பெரியவற்றுள் பெரியது.

அது நுண்மை நிலை. இந்த நிலை தான்யாவரையும் யாவற்றையும் ஆட்டுவிக்கும் நிலையாம். பிரபஞ்ச தோற்ற ஒடுக்கங்கள் சிவத்தாலே உள என அறியலாம்.

"***அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து.***

**சக்தி**

சக்தியே வினை முதற்காரணம். அறிவாற்றல் (ஞான சக்தி) வனப்பாற்றரல் (பராசக்தி) நடப்பாற்றல் (ஆதிசக்தி) அனபாற்றல் (இச்சா சக்தி) தொழிலாற்றல் (கிரியா சக்தி).

"***சக்தி இன்றேல் சிவமில்லை***

***சிவம் இன்றேல் சக்தி இல்லை"***

**விந்து (ஒளி)**

அண்டாதித்தன் - சிவமே தன்சுடராகிய

திருவருட் பேரொளியாய் நிற்கும். இவை ஐந்து வகைப்படும் அண்ட ஒளி, பிண்ட ஒளி, மனஒளி, ஞான ஒளி ,சிவ ஒளி.

**நாதம் (ஒலி)**

ஓங்காரத்துடன் கூடிய ஐம்பத் தோரெழுத்துக்களாலாகியதே ஒலி நாதம் எனப்படும் . சப்த ரூபமாகவுள்ள மந்திரங்கட் கெல்லாம் முதலாக உள்ள "ஓம்" என்னும் மந்திரம்.

**சதாசிவம்(அரு உருவம்)**

திரிபுரி சத்தியால்

"படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்றும் ஐந்து தொழில்கள் நடக்கும். அவ்வைந் தொழிகள் அருளால் புரியப்படுதலால் அருளோன் என்றும் அருள் மயமான சக்தியும் அருளை நல்குபவனான சிவனும் சேர்ந்த இணைப்பே சதாசிவம் எனப்பட்டது.

**உருவம்**

**ஆண்டான் (ஈசுரன்).**

உயிருக்குயிராய் உள்ளத்தே நீங்காது நிற்கின்ற ஒப்பில் முழு முதல் பொருளாய் சிவத்தை உள்ளத்து ஒன்று என்பர். சிவம் தன்னைக் காட்டாத நிலையை ஆண்டான் (அல்லது) ஈசுரன் எனப்பட்டது.

**அயன் (படைப்பு).**

சிவன் பால் பேரறிவும் சிவையாகிய சக்தியினின்று பேராற்றலும் வெளிப்படும். விந்துவாகிய சிவத்தில் இச்சை தோன்றும் சக்தியினிடமிருந்து கிரியை ஆற்றல் தோன்றும்.

**அரி (காப்பு)**

மிகச்சிறந்து தோன்றும் தலைமைப்பாட்டினை எய்துவதற்குறிய செறிவு நெறியை காப்பவனே அரி.

***"தாங் கருந் தன்னையுந் தானவை பல்லுயிர்.***"

**அரன் (அழிப்பு.)**

இலயங்கள் அல்லது ஒடுக்கங்கள்.அவை

மூன்று வகை நாள் ஒடுக்கம், ஊழி ஒடுக்கம், பேரூழிஒடுக்கம்.

**முடிவுகள்**

சித்தர்கள் தன் மெய்ஞான அறிவால் இப்பிரபஞ்சப் பொருள்களை உருவம் அருவம் என வகுத்து, ஒவ்வொரு அணுவிலும் இந்த ஒன்பது பொருள் உண்டு என்னும். கூறியுள்ளனர். அவற்றை குறிக்கும் வகையில் இவ்ஆய்வு அமைந்துள்ளது.

**மேற்கோள்கள்.**

-சித்தம் இலக்கியம்.

-திருமந்திரம்.

-தொல்காப்பியம்.

**துணை நூல்கள்**


1. *உடல் தத்துவம். மு. வேணுகோபால், இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை. சென்னை – 600106. pg 7.
2. *சித்த மருத்துவாங்க சுருக்கம், டாக்டர். க.சு. உத்தமராயன் இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை சென்னை – 600106 pg 17.
3. *தோற்றக்கிரம ஆராய்ச்சி, டாக்டர். க.சு. உத்தமராயன் இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை சென்னை – 600106.pg 197.